# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

## (DEPOSITION OF WITNESS

**பி.சா.3-)**

அசல் வழக்கு எண். 937/2017

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சுரேஷ்பாபு | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | பொன்னுசாமி | கிராமம் | அரசூர் |
| பணி | கிராம நிர்வாக அலுவலர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 12.11.2025 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

1. நான் சூலூர் தாலூக்கா, அரசூர், ஊத்துப்பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். எனக்கு, நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணையில் UDR ஆவணம் கொண்டு வர சொல்லி இருந்தது. UDR பதிவேடு, அ-பதிவேடு, அடங்கல், புலப்படம், கிராம கை-சிட்டா, கணிணி சிட்டா ஆகிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். **UDR பதிவேடு பி.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அரசூர் கிராம புல எண்.194 க்கான புலப்படம், புல எண்.194/9 க்கான பட்டா எண்.1146 க்கான சிட்டா, அடங்கல் பதிவேடு, அரசூர் கிராமத்திற்கான கை-சிட்டா முறையே பி.சா.ஆ.14 முதல் 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பி.சா.ஆ.12, UDR பதிவேடு எனக்கு முன்பிருந்த கிராம நிர்வாக அலுவலர் வழங்கியது. நான் தாக்கல் செய்துள்ள UDR யும், பி.சா.ஆ.12 UDR யும் ஒன்றுதான். UDR என்பது UPDATING REGISTER இது 1982 ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது, 1986 ம் ஆண்டு அரசூர் கிராமத்தில் அமலுக்கு வந்தது. UPDATING REGISTER தயார் செய்வதற்கு எங்களது அலுவலகத்தில் என்ன செய்வார்கள் என்றால் சொத்துக்கு வந்து அனுபவப்படியும், ஆவணங்களின் படியும் சொத்தை அளந்து, நபர்களுடைய எல்லையை குறிப்பிடுவார்கள். அதன் பின்னிட்டு

உட்பிரிவுடன் பட்டா வழங்கப்படும். UDR படி புல எண்.194/4 யாருக்கு பாத்தியப்பட்டதாக எனது ஆவணத்தில் உள்ளது என்றால் பட்டா எண்.315 மைனர் ஜெயப்பிரகாசம் மற்றும் ரத்தினம் ஆகியோர்கள் பெயரில் உள்ளது.

3. UDR ல் தவறு ஏற்படும் போது பாதிக்கப்பட்டவர் ஏதேனும் இருப்பின் அதை திருத்தம் செய்ய தகுந்த விண்ணப்பம் கொடுத்து திருத்தி கொள்ளலாம் என்றால் சரிதான். புல எண்.194/4 யை பொறுத்து, பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது தவறானது என யாரிடமாவது விண்ணப்பம் வந்துள்ளதா என்றால் நான் பணிக்கு வந்த பின்னிட்டு எந்த விண்ணப்பமும் வரவில்லை. தற்போது வரை மைனர் ஜெயப்பிரகாசம் மற்றும் ரத்தினம் ஆகியோர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் KPR DEVELOPERS LTD., பெயரில் பட்டா எண்.1363 ல் உள்ளது.

4. புல எண்.194/4 க்கான கணிணி சிட்டா கொண்டுவரவில்லை, கை-சிட்டா கொண்டு வந்துள்ளேன். பி.சா.ஆ.7 ஆவணத்தில், புல எண்.194/4 காலையின் கணிணி சிட்டா K.P.C கந்தசாமி த/பெ. K.K. சென்னியப்ப கவுண்டர் மற்றும் KPR DEVELOPERS LTD., பெயரில் உள்ளது. பி.சா.ஆ.7 ஆவணத்தை மண்டல துணை வட்டாட்சியர் வழங்கியுள்ளார். புல எண்.194/5,6,7,8, 15 காலைகளுக்கு தென்புறமாக சர்வே எண்.206 மற்றும் 205 உள்ளது, 205 என்பது அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் குட்டை, வாய்க்கால், வண்டிப்பாதை என உள்ளது. புல எண்.206 ல் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் மேய்ச்சல் நிலம், வாய்க்கால், வண்டிப்பாதை, நடைபாதை என உள்ளது.

5. பொதுவாக பட்டாவில் குறை ஏதேனும் இருந்தால் ஜமா பந்தியில் சொல்லலாம் என்றால் சரிதான். அவ்வாறு விண்ணப்பம் கொடுத்தால் உண்மை நிலவரம் கண்டறிந்து ஆவணம் ஏற்படுத்தப்படும் என்றால் சரிதான். புல எண்.194/4 காலையின் UDR ல் COLUMN 12 ல் என்ன உள்ளது என்றால் எதுவும் குறிக்கவில்லை. புல எண்.194/9 என்பது கூட்டு வண்டித்தடம் என குறிப்பிடப்பட்டுள்ளது. புல எண்.194/9 பொறுத்து, பிரதிவாதிகள் சொத்தை கிரயம் பெற்றதாகவும் அது குறித்து தனிப்பட்டா வழங்கக்கோரியும் விண்ணப்பம் அளித்தனர் என்றால் சரிதான். அது சம்மந்தமாக வாதி தெய்வசிகாமணி ஆட்சேபணை

தெரிவித்தார். அதனால் பட்டா பெயர் மாற்றம் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.

6. புல எண்.194/4 உட்பிரிவானது, புல எண்.194/5, 6, 7, 8 காலையின் வடபுறம் உள்ளது என்றால் சரிதான். புல எண்.194/4 தற்சமயம் சிட்டாப்படியும், அடங்கல் படியும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. எனக்கு வந்த அழைப்பாணையில் க.ச.எண்.194 ன் UDR நில உடைமை மேம்பாட்டு பதிவேடு தாக்கல் செய்ய சொல்லி உள்ளது என்றால் சரிதான். நான் இன்று UDR பதிவேட்டில் உள்ள அ-பதிவேடு, அடங்கல், கை-சிட்டா, புலப்படம், புல வரைபடம், கணிணி சிட்டா ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். நான் 01.07.2025 ல் நான் அரசூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன். நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆவணங்கள் படி சாட்சியம் அளிக்கிறேன்.

2. நில உடைமை மேம்பாட்டு திட்டம் என்பது தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாய நிலங்களை அளந்து, விவசாயிகளின் ஆவணங்கள் படி பட்டா வழங்குவது தான் திட்டத்தின் நோக்கம் என்றால் சரிதான். அவ்வாறு பட்டா வழங்கப்பட்டதில் ஏதேனும் குறைபாடு இருந்தாலும் அளவுகளில் ஏதேனும் வித்தியாசம் இருந்தாலும், பெயர் மாறியிருந்தாலும் அதனை சரிசெய்வதற்கு இன்றுவரை மாவட்ட வருவாய் அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா வழங்குவதற்கு முன்பு விவசாயிகளின் ஆவணங்களை பரிசீலனை செய்து அதற்கு ஒரு எண் கொடுக்கப்பட்டு பராமரிக்கப்டும் என்றால் அப்போதுள்ள நடைமுறை பற்றி எனக்கு தெரியாது.

3. புல எண்.194/4 காலையின் பரப்பளவு எவ்வளவு என்றால் ஏக்கர் 1.48 சென்ட் ஆகும். நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா வழங்கும்போது, ரத்தினம் மற்றும் ஜெயபிரகாசம் உரிமையாளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரத்தினம் மற்றும் ஜெயபிரகாசம் ஆகியோர்களுக்கு பத்திரங்கள்

சரிபார்க்கப்பட்டிருக்குமா என்றால் சரிபார்க்கப்பட்டிருக்கும். ரத்தினம் மற்றும் ஜெயபிரகாசம் ஆகியோர்களுக்கு புல எண்.194/4 பாத்தியப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் உள்ள விஸ்தீரணத்தை விட அதிகாமான விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்யிருந்தால் தவறானது என்றால் சரிதான். அவ்வாறு இருந்தால் இன்றுவரை அதை சரிசெய்வதற்கு மாவட்ட வருவாய் அலுவலருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலரிடம் அவ்வாறு ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய மனுத்தாக்கல் செய்ய காலநிர்ணயம் எதுவும் விதிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

4. புல எண்.194/9 என்பது கூட்டு வண்டிப்பாதை என்றால் சரிதான். புல எண்.194/9 காலையானது சுப்பண்ண கவுண்டர் மக்கள் முத்துசாமி கவுண்டர் 1, குமாரசாமி கவுண்டர் 2, கருப்பன்ன கவுண்டர் மக்கள் மைனர் ஜெயப்பிரகாசன் 3, காப்பாளர் மற்றும் தாயார் ரத்தினம் 4, மாரப்ப கவுண்டர் மக்கள் தெய்வசிகாமணி 5, பழனிச்சாமி கவுண்டர் 6, கிருஷ்ண கவுண்டர் மனைவி ராமாத்தாள் 7, ஆகியோர்கள் பெயரில் கூட்டாக உள்ளது. தற்போது நிகழ்நிலையில் புலஎண்.194/9 வண்டிப்பாதையாக உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் அவர்களது நிலத்துடன் சேர்த்து வண்டிப்பாதையும் சேர்த்து வேலி அமைத்துள்ளார் என்றால் சரிதான்.

5. கூட்டுவண்டிப்பாதை கொள்ளுப்பாளையத்தில் தொடங்கி தென்வடலாக தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள க.ச.எண்.206 ல் குட்டையை தாண்டி ரோட்டிற்கு வருகிறது என்றால் கொள்ளுப்பாளையத்தில் தென்வடலாக க.ச.எண்.206 வரை பாதை உள்ளது, க.ச.எண்.206 வழியாக பாதை இல்லை. புல எண்.194/4 காலையை நான் நேரடியாக பார்வையிட்டேன். புல எண்.194/4 க்கு தென்புறமாக க.ச.எண்.194/5, 6, 7, 8 ஆகிய நிலப்பரப்புகளில் இருந்து புல எண்.194/4 என்பது 1 ½ அடி உயரமாக உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் சொத்தை அளந்தபோது நான் சென்றேனா என்றால் நான் இல்லை, அன்று நான் விடுமுறையில் இருந்தேன்.

6. புல எண்.194/5, 6, 7, 8 க்கு வடபுறமாக புல எண்.194/4 காலை உள்ளது. புல எண்.194/5, 6, 7, 8 க்கு கிழபுறமாக புல எண்.194/9 காலை உள்ளது.

மேல்புறமாக UDR படி மாரப்ப கவுண்டருக்கு, க.ச.எண்.207/1 காலை உள்ளது. கணபதி கவுண்டர் மகன் சுப்பண்ண கவுண்டர் பெயரில் க.ச.எண்.207/2 காலை உள்ளது. கிருஷ்ண கவுண்டர் பெயரில் க.ச.எண்.207 ல் பூமி உள்ளதா என்றால் இல்லை. புல எண்.194/5, 6, 7, 8 க்கு தென்புறமாக க.ச.எண்.206 உள்ளது. அது அரசுக்கு பாத்தியப்பட்ட மேய்ச்சல் நிலம், வாய்க்கால், வண்டிப்பாதை, நடைபாதை ஆகும். புல எண்.194/4 ல் வாதிகள் பூமியை ஆக்கிரமித்து பிரதிவாதியின் முன்னோர்கள் பட்டா பெற்றுக்கொண்டதால் அதை ஆட்சேபணை செய்து அதை சரிசெய்ய கோரி வாதிகள் மனு கொடுத்திருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

7. பட்டா பாஸ் புத்தக சட்டம் பிரிவு 4 ன் கீழ் ஒரு சிவில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது UDR உட்பட அனைத்து வருவாய் துறை பதிவேட்டில், எந்தவிதமான மாற்றமும் செய்யக்கூடாது என்றால் சரிதான். வாதிகள் கொடுத்த மனுவில், மாவட்ட வருவாய் அலுவலர் மேற்படிசிவில் வழக்கை காரணம் காட்டி பட்டா பாஸ் புத்தக சட்டம் 4 ன் படி, எந்தவித மாற்றமும் செய்ய முடியாது என்றும், இந்த வழக்கு முடிந்த பின்னர் அதில் ஏற்படும் தீர்ப்பின் அடிப்படையில் தான் மாற்றம் செய்ய முடியும் என்று தெரிவித்துவிட்டார் என்று சொன்ன விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தரப்பில் UDR பதிவேடு மட்டும் கேட்கப்பட்டது என்றும், நான் பிரதிவாதிகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் கேட்காத சில ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. KPR DEVELOPERS என்பது மிகப்பெரிய நிறுவனம் என்றும், அவர்களுக்கு ஆதரவு செய்ய ஏதோ காரணத்திற்காக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. KPR DEVELOPERS என்ற நிறுவனம் புல எண்.194/9 கூட்டு வண்டித்தடப்பகுதியை அவர்களது பெயரில் தனிப்பட்டாவாக தாக்கல் செய்யுமாறு கோரி என்னிடம் மனு தாக்கல் செய்தார்களா என்றால் ஆமாம். நான் பொறுப்பேற்ற பின்னிட்டு இணையதளம் மூலம் கொடுத்தனர். அந்த மனுவுக்கு புல எண்.194/5, 6, 7, 8 ன் தற்போதைய உரிமையாளர்களான செந்தில்பிரகாசம், பூங்கொடி இருவர் வந்து, ஆட்சேபணை செய்தனர். வழக்கு நிலுவையில் இருப்பதாக சொன்னார்கள். இந்த வழகது நிலுவையில் இருப்பதால் அவ்வாறு பெயர் மாற்றம்

செய்ய இயலாது என மேற்படி மனுவானது முடிக்கப்பட்டது. நான் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur